Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

(87)

உறுப்பினர் செயலர் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
மாமல்லபுரம் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு.கி.சந்திரசேகர்,B.E., M.T.P.,

ந.க.எண். 1413/2019 மாஉதிகு. நாள். 19.12.2019

பொருள் : அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் - செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், ஏகாட்டூர் கிராமம், சர்வே எண்கள்: 66/2A1F, 69/1G -ல் மனை எண்: 60B - 445.94 சதுர மீட்டர் பரப்பளவு மனையிடத்தில் **1250.256** சதுர மீட்டர் பரப்பில் Stilt floor + ஐந்து தளங்கள் (Stilt + 5 floor) கொண்ட Affordable House அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி வழங்குதல் குறித்து.

பார்வை :

1. மனுதாரர் **M/s KCS Foundations,** Chennai அவர்களின் கடிதம் நாள். 25.09.2019 & 09.12.2019 மற்றும் 18.12.2019.
2. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2019 TCP2 நாள். 06.11.2019.
3. அரசாணை (நிலை) எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சித் துறை நாள்.28.03.2012.
4. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019.
5. அரசாணை எண்.53, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்: 16.04.2018.
6. அரசாணை எண்.112, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்: 22.06.2017.
7. 163-வது மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும கூட்டம் தீர்மானம் எண்.1, நாள். 19.02.2019.
8. இவ்வலுவலக கேட்பு கடிதம் இதே எண். நாள்.12.12.2019 [அபிவிருத்திக் கட்டணம், நன்னிலைத் தொகை, அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு கட்டணங்கள் மற்றும் Completion Certificate, Security Deposit, Display Board கட்டணம் செலுத்தக் கோரியது]
9. மனுதாரர் **M/s.KCS Foundations,** சென்னை அவர்களின் விண்ணப்பம் நாள்:12.12.2019. [அபிவிருத்திக் கட்டணம், நன்னிலைத் தொகை, அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு கட்டணங்கள் மற்றும் Completion Certificate, Security Deposit, Display Board கட்டணம் செலுத்தியது.]

*****

உத்திரவு

மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், செங்கல்பட்டு மாவட்டம் - திருப்போரூர் வட்டம் / ஊராட்சி ஒன்றியம், ஏகாட்டூர் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்: 66/2A1F, 69/1G -ல் மனை எண்: 60B - 445.94 சதுர மீட்டர் பரப்பளவு மனையிடத்தில் **1250.256** சதுர

V.S. Arun Prakash

மீட்டர் பரப்பில் Stilt floor + ஐந்து தளங்கள் (Stilt + 5 floor) கொண்ட Affordable House அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி வழங்கப்பட்ட விபரம் பின்வருமாறு:

Area Statement

மனையிடத்தின் மொத்த பரப்பு - 445.94 சதுர மீட்டர்

Floor	Total Builtup Area	Non FSI Area			Residential		
		Covered Parking	Deduction	Incidental Structures	Total Covered Builtup Area	Total Net FSI Area	No.of Dwelling Units
Floor - Stilt	208.376	110.486	15.33	82.56	97.890	82.560	0
Floor 01	208.376	-	-	-	208.376	208.376	8
Floor 02	208.376	-	-	-	208.376	208.376	8
Floor 03	208.376	-	-	-	208.376	208.376	8
Floor 04	208.376	-	-	-	208.376	208.376	8
Floor 05	208.376	-	-	-	208.376	208.376	8
Total	**1250.256**	110.486	15.33	82.56	1139.77	1124.44	40

Two Wheeler Parking - 8 Nos

Plot Coverage - 46.73%

F.S.I. - 2.52 < 2.60

உத்தேச அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானம் அமையும் மனையிடத்திற்கு **"ABCD"** என எல்லையிட்டு மனை ஒப்புதலும் அம்மனையில் அமையும் கட்டுமானங்களுக்கு, நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின் அடிப்படையில் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 49-ன் கீழ் **க.வ/மா.உ.தி.கு எண். 27/2019** என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கப்படுகிறது.

இந்த திட்ட அனுமதி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 50-ன் படி திட்ட அனுமதி வழங்கப்பட்ட தினத்திலிருந்து **19.12.2019 முதல் 18.12.2024 வரை ஐந்தாண்டுகளுக்கு** மட்டுமே செல்லத்தக்கதாகும்

பார்வை 7-ல் கண்ட மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமத்தின் 163-வது கூட்டத் தீர்மானம் எண்.1 நாள். 19.02.2019 -ன் படியும், பார்வை -3,4 மற்றும் 5-ல் கண்ட அரசாணைகளின் படியும், பார்வை 8-ல் கண்ட இவ்வலுவலக கேட்பு வரைவுகள் மூலம் மனுதாரிடம் வளர்ச்சிக் கட்டணம், நன்னிலை வரி கட்டணம், I & A கட்டணம் மற்றும் Completion Certificate, Security Deposit, Display Board கட்டணம் கீழ்க்கண்டவாறு கோரப்பட்டு, பார்வை 9-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அதற்கான கட்டணத் தொகை விபரம் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

V.S. Arun Prakash

மனுதாரர் உத்தேசத்திற்குரிய அனைத்து கட்டணங்களையும் கீழ்க்கண்டவாறு அரசுக்கு செலுத்தப்பட்டு அதற்குரிய அசல் நகல் பெறப்பட்டுள்ளது.

(i) அபிவிருத்தி கட்டணம் : **ரூ.18,500/-, IOB** மாமல்லபுரம் வங்கி கிளை இவ்வலுவலக கணக்கு எண். 40000 -த்தில் உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், தலைப்பில் நாள். 12.12.2019-ல் செலுத்தப்பட்டுள்ளது.

(ii) நன்னிலைத் தொகை : **ரூ. 4,500/- SBI** திருக்கழுக்குன்றம் கிளை Treasury Chalan நாள். 12.12.2019-ல் செலுத்தப்பட்டுள்ளது.

(iii) I & A தொகை : **ரூ.4,22,000 /- SBI** திருக்கழுக்குன்றம் கிளை Treasury Chalan நாள்.12.12.2019 -ல் செலுத்தப்பட்டுள்ளது.

(iv) Completion Certificate : ரூ.40,500/- IOB மாமல்லபுரம் வங்கி கிளை இவ்வலுவலக கணக்கு எண். 40000 -த்தில் உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், தலைப்பில் நாள். 11.12.2019-ல் செலுத்தப்பட்டுள்ளது.

(iv) Security Deposit : ரூ.2,11,000/- IOB மாமல்லபுரம் வங்கி கிளை இவ்வலுவலக கணக்கு எண்:40000 -த்தில் உறுப்பினர் செயலர் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும தலைப்பில் நாள்:11.12.2019 மற்றும் 13.12.2019 -ல் செலுத்தப்பட்டுள்ளது.

(vi) Display Board: ரூ.10,000/- மாமல்லபுரம் வங்கி கிளை இவ்வலுவலக கணக்கு எண்:40000 -த்தில் உறுப்பினர் செயலர் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும தலைப்பில் நாள்:11.12.2019 -ல் செலுத்தப்பட்டுள்ளது.

சிறப்பு நிபந்தனைகள்

1. "நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக அலுவலக கட்டிட அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

2. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

3. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant / developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

4. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 05013/2015 MP, நாள் 19.03.2015-ன் படி "கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில் பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (setback) வாகனம் நிறுத்தம் ஆகிய விபரங்கள் நிறுவப்பட்டிருக்க வேண்டும்".

5. "The Tamil Nadu Government, in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated : 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Ragulation & Development) Act 2016. The promoter has to advertises, Market book sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate project or part of it only after registering the Real Estate project with the Real Estate Regulatory Authority.

6. Electrical Transformer room should be constructed as per the rule 46 of TNCDB rules 2019 with Satisfaction of TANGEDCO.

7. Affordable dwelling units should be Maintained as it is as per the approval without any amalgamation

<u>நிபந்தனைகள்</u>

1. உத்தேச Affordable House அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.

2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.

4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 11.10.2002-ன் படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், குடியிருப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள் 03.11.2004-ன் படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.

10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்கவேண்டும்.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகல் வாங்குபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்

திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு **ஏகாட்டூர்** ஊராட்சி மற்றும் கிராமம், தனி அலுவலர்/ ஆணையாளர், அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

மேலும் திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு, **ஏகாட்டூர்** ஊராட்சி மற்றும் கிராமம், தனி அலுவலர்/ ஆணையாளர் அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

19.12.19

உறுப்பினர் செயலர்
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
மாமல்லபுரம்

19/12/19

இணைப்பு :
திட்ட அனுமதி வழங்கப்பட்ட
வரைபடங்கள் - 2 தொகுப்பு

பெறுநர்
தனி அலுவலர்/ ஆணையாளர்,
ஏகாட்டூர் ஊராட்சி மற்றும் கிராமம்,
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

நகல்
M/s KCS Foundations,
No:161, 4வது குறுக்கு தெரு,
Plot No:161, Classic Farms,
Sollinganallur, Chennai - 600 119.

V.S. Arun Prakash

97

ந.க.எண்.6909/2019/ஆ1
நாள். .12.2019

ஊராட்சி ஒன்றியம்,
திருப்போரூர்.

கடிதக்குறிப்பு

பொருள் : பலமாடி கட்டிடம் - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - முட்டுக்காடு ஊராட்சி ஏகாட்டூர் கிராமம், M/s.KCS Foundations., என்பவரின் சர்வே எண்கள்.66/2A1F, 69/1G-ல் மனை எண்.60B - 445.94சதுர மீட்டர் பரப்பளவு மனையிடத்தில் 1250.256சதுர மீட்டர் பரப்பில் Stilt Floor + ஐந்து தளங்கள் (Stilt + 5 Floor) கொண்ட Affordabla House அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானத்திற்கு - திட்ட அனுமதி வழங்குதல் - சார்ந்து.

பார்வை : உறுப்பினர் செயலர் (பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம், மாமல்லபுரம், அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.1413/2019/ மாஉதிகு நாள்.19.12.2019.

பார்வையில் காணும் உறுப்பினர் செயலர்(பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம், மாமல்லபுரம் அவர்களின் நடவடிக்கைகளின்படி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், முட்டுக்காடு ஊராட்சி ஏகாட்டூர் கிராமம், M/s.KCS Foundations., என்பவரின் சர்வே எண்கள்.66/2A1F, 69/1G-ல் மனை எண்.60B - 445.94சதுர மீட்டர் பரப்பளவு மனையிடத்தில் 1250.256சதுர மீட்டர் பரப்பில் Stilt Floor + ஐந்து தளங்கள் (Stilt + 5 Floor) கொண்ட Affordabla House அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து கட்டிட வரைபட அனுமதி வழங்க வேண்டி கடிதம் வரப்பெற்றுள்ளது. உத்தேசம் கீழ்கண்டவாறு அமைகிறது.

Area Statement

மனையிடத்தின் மொத்த பரப்பு - 445.94ச.மீ

Floor	Total Build up Area	Non FSI Area			Residential		
		Covered Parking	Deduction	Incidental Structures	Total Covered Build up Area	Total Net FSI Area	No.of Dwelling Units
Floor - Stilt	208.376	110.486	15.33	82.56	97.89	82.56	0
Floor 01	208.376	-	-	-	208.376	208.376	8
Floor 02	208.376	-	-	-	208.376	208.376	8
Floor 03	208.376	-	-	-	208.376	208.376	8
Floor 04	208.376	-	-	-	208.376	208.376	8
Floor 05	208.376	-	-	-	208.376	208.376	8
Total	**1250.256**	**110.486**	**15.33**	**82.56**	**1139.77**	**1124.44**	40

Two Wheeler Parking - **8 Nos**
Plot Coverage - **46.73%**
F.S.I - **2.52 < 2.60**

உத்தேச அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானம் அமையும் மனையிடத்திற்கு "ABCD" என எல்லையிட்டு மனை ஒப்புதலும் அம்மனையில் அமையும் கட்டுமானங்களுக்கு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின் அடிப்படையில் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49-ன்கீழ் க.வ/மாஉதிகு எண்.27/2019 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்ட அனுமதி நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 50ன்படி 19.12.2019 முதல் 18.12.2024 வரை ஐந்தாண்டுகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

V.S. Arun Prabakar

(97)

45

இந்த அலுவலக கட்டிடத்திற்கு திட்ட அனுமதி அளிக்க கீழ்காணும் விவரப்படி, கட்டணங்கள் மனுதாரரிடமிருந்து வங்கி வரைவாக அளிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

வ. எண்	கட்டண விவரம்	தொகை ரூ.	வங்கி வரைவு அளிக்கப்பட வேண்டிய முகவரி
1.	அனுமதி கட்டணம் (1139.77 Sq.m)-க்கு ஒரு சதுர அடிக்கு குறைந்தபட்சம் ரூ.10/- விதம் 12268சதுர அடிக்கு	1,22,680/-	**Special Officer, Muttukadu Panchayat (Payable at Chennai)**
2.	கட்டிட தொழிலாளர் நல நிதி மதிப்பீட்டுத் தொகை ரூ.14721600/- ற்கு 1சதவிதம்	1,47,216/-	**Manual Workers General Welfare Fund of TNCWW Board (Payable at Chennai)**
3.	கொடிநாள்	5,000/-	**Armed Forces Flag day Fund (payable at Chennai)**

மேற்காணும் விவரப்படி, செலுத்தப்படவேண்டிய கட்டணத்திற்கான வங்கி வரைவை ஒரு வார காலத்திற்குள் ஊராட்சி செயலர் மூலம் அலுவலகம் சமர்ப்பித்து கட்டிட திட்ட அனுமதி உத்தரவினை பெற்றுக்கொள்ள இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

தனி அலுவலர், முட்டுக்காடு ஊராட்சி /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
திருப்போரூர்.

பெறுநர்

M/s.KCS Foundations.,
No.161, 4th Cross Street, Plot No.161,
Classic Farms, Sholinganallur, Chennai - 600119.

நகல் - மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(மண்டலம் - II),
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்.
(கள ஆய்வு மேற்கொண்டு ஆய்வறிக்கை சமர்ப்பிக்கும்பொருட்டு)

V.S. Arun Prasath



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate